பதிவு எண்: M 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: மாசி 11 (23—2—68) வெள்ளி ★ வெளியூர்: மாசி 12 (24—2—68) சனி [இதழ்: 210

## சட்டத்துக்கு முரணாக உள்துறை அமைச்சகம்!

புதுடில்லி, பிப். 22—

"மத்திய உள்துறை அமைச்சகத்தின் கார்களில்—மோட்டார் வாகனச் சட்டத்துக்கு முரணாக—இந்தி எண் தகடுகள் உள்ளன.

"சட்டம்—ஒழுங்குக்குப் பொறுப்பாளியாக உள்துறை அமைச்சகத்திலேயே இந்நிலை என்றால், நாட்டில் எவ்வாறு சட்டம்-ஒழுங்கைத் தக்கவாறு பாதுகாக்க இயலும்?''

—திருமதி யசோதா ரெட்டி
(மாநிலங்களவையில்)

# 'உலக நாடுகளுடன் நாம் போட்டியிட இயலும்'

## 'திட்டங்கள் நிரம்ப உண்டு— ஆனால் குறுக்கீடுகள் கூடாது'

## 'முன்னேறிய நாடுகளின் தொழில் நுணுக்க அறிவைப் பெற்று நாட்டை வளமாக்குவோம்— பின்தங்கிய நாடுகளுக்கு உதவுவோம்'

### 'தமிழக நாள்' விழாவில் முதலமைச்சர் அண்ணா உரை

சென்னை, பிப். 22—

"நம்மிடம் திட்டங்கள் நிரம்ப உண்டு; குறுக்கீடு ஏதும் இல்லையென்றால்—நமக்கு நாமே உருவாக்கிக் கொள்ளும் தடையும் பூசலும் இல்லையென்றால்—வெற்றிப் பாதை நோக்கி வீறுநடை போடலாம்!

"கட்சி—அரசியல் வேறுபாடு இன்றி நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை மட்டுமே கருத்தில்கொண்டு நாம் முயன்றால், முன்னேறி வளர்ந்த பல உலக நாடுகளுடன் போட்டியிடும் நிலைக்கு நாம் வளரலாம்; அதனால்தான், முன்னேறிய பல நாடுகளை அழைத்து இந்தச் சந்தையில் பங்குகொள்ளச் செய்திருக்கிறோம்.

"பங்கு பெற்ற நாடுகளை ஏற்றிப் போற்றுவோம்—அவர்களின் தொழில் நுணுக்க இரகசியங்களை நாம் புரிந்துகொள்ளுவோம்—வேறுபாடுகளை மறந்து அவற்றை நாட்டுக்குப் பயன்படுத்துவோம்!

"நாட்டிற்குப் புத்துயிர் ஊட்டும் அந்த முயற்சியில் மறுமலர்ச்சி காணும் வேலைகளில் நாடு முழுமையும் ஒன்றாய் நின்று முனைந்து ஈடுபட்டால், 'ஆகமுடியாதது' ஒன்றுமே இல்லை! அதை நினைவுபடுத்தி நம்மை ஊக்குவிக்கும் முயற்சியே இந்தச் சந்தைக் கண்காட்சி!

"இங்கே பங்கு பற்றியிருக்கும் நாடுகளின் முன்னேற்றமும்—நம்முடைய ஆர்வக் கனவுகளும் சேர்ந்து—நல்ல வசதிகளும் வாய்ப்பும் அமையுமானால் இந்த நாட்டைப் பொன் விளையும் பூமியாக்குவோம்! அப்போது சுபீட்ச வாழ்க்கை நோக்கி—சுதந்தர வாழ்க்கை நோக்கி நடைபோடுவோம்! வளம் கூடுமானால், உலகின் வளர்ந்த நாடுகளோடு போட்டியிட்டுப் பின்தங்கிய நாடுகளின் முன்னேற்றத்துக்கு நாமும் கைகொடுப்போம்!''

இவ்வாறு தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்திய—உலகத் தொழில் வணிகப் பொருட்காட்சியின் 'தமிழக நாளை' விழா சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அறிஞர் அண்ணா நகரில், இந்திய—உலகத் தொழில் வணிகக் கண்காட்சியில் எழிலுற அமைந்துள்ள தமிழக அரசு அரங்கின் சிறப்புணர்த்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட 'தமிழக நாள்' சிறப்பு விழாவிற்கு வந்திருந்தவர்களைத் தமிழகக் கல்வி—தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற்றார்கள்.

### வணிகருக்கு வேண்டுகோள்

தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் வணிகர்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்துக் குறிப்பிட்டதாவது:—

"இந்தச் சந்தைப் பொருட்காட்சி நடைபெறும் அண்ணா நகரை சென்னை நகரில் நிலையாகப் பொருட்காட்சி நடத்தும் திடலாகவே நிலைபெறச் செய்யலாம் என்று திட்டமிடப்பட்டுவருகிறது. இங்கே பல பெரிய வணிக நிறுவனங்களும், பல நாட்டு அரசுகளும் ஓரளவு நிலையான கட்டடங்களையே கட்டியிருக்கின்றன. அந்தக் கட்டடங்களை அவர்கள் தமிழக அரசுக்குத் தானமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"பிற மாநில அரசுகளும், வெளிநாட்டு அரசுகளும், வணிகப் பெருமக்களும் என் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து ஆவன செய்வர் என்று நம்புகிறேன்."

### ஆளுநர் பாராட்டு

தமிழக ஆளுநர் திரு. உஜ்ஜல் சிங் பேசுகையில், நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொதுவான மறுமலர்ச்சியை—தொழில் வளர்ச்சியைப் பாராட்டினார்.

"தொழில் துறையில் கணிசமான அளவு நாம் வளர்ந்திருக்கிறோமே தவிர, அது மக்களின் வாழ்வில் பிரதிபலிப்பதாக இல்லை; மக்கள் அதை உணர்ந்ததாகவும் தெரியவில்லை.

"ஆனால் உழவுத் துறையில், இன்றைய உழவர்கள் கருத்தும் கவனமும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். முதல் போகம்—இரண்டாம் போகம்—மூன்றும் போகம்—என்று, பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிட்டு நாட்டுக்கு நலன் விளைவிக்க முயலுகிறார்கள்"

என்று குறிப்பிட்டார்.

### அறிஞர் அண்ணா

தமிழக முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகச் சிறந்த உரை நிகழ்த்தினார்; அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தச் சந்தைப் பொருட்காட்சியை ஏற்பாடு செய்த நேரம், 'கொஞ்சம்கூடப் பொருத்தமில்லை' என்றுதான் அமைப்பாளர்கள் கருதினார்கள்! தொழில் மந்தப்பட்டு இருக்கிற போது—இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மிகுந்துள்ள நிலையில்—ஏற்றுமதி தோல்வியடைந்திருக்கிற சூழலில், 'இது வெற்றி பெறுமோ' என்றுதான் ஐயுற்றார்கள்!

மதிப்புக்குரிய ஆளுநர் அவர்களே! இந்தச் சந்தைப் பொருட்காட்சி, அளவிலும் வகையிலும், தரத்திலும் தன்மையிலும் இவ்வளவு வெற்றிச் சிறப்புடன் விளங்குகிறது என்றால், அதற்

குத் தோன்றாத் துணையாய்—தூண்டுங்கோலாய் அமைந்த தாங்கள் ஆளுநராக இருப்பதே காரணம்!

நீங்கள் எங்கள் ஆளுநராக வாய்த்திருப்பது எங்கள் நல்வாய்ப்பே! நீங்கள் பிறந்து வளர்ந்த பாஞ்சால மண்ணில்—அது முழுமையாய் இருந்த நாளிலும், பிரிந்த காலத்தும்—பல வகைகளில் மாநில அரசில் பங்கேற்று மக்கள் நல்வாழ்வுக்குப் பாடுபட்டிருக்கிறீர்கள்!, நிதியமைச்சராக இருந்திருக்கிறீர்கள்! உழவுத் துறையில் உற்சாகம் காட்டி இருக்கிறீர்கள்! இந்திய நாட்டின் 'தலைவிதி'யை நிர்ணயித்த வட்டமேசை மாநாடுகளில் பங்கேற்றுக் கருத்துரை வழங்கியிருக்கிறீர்கள்! வாழ்வின் பல கோணங்களில்—பல நிலைகளில் இருந்து பணி செய்தவர் தாங்கள்! ஒரு வாரத்திலாவது நீங்கள் கலந்துகொள்ளாத நிகழ்ச்சி இல்லை!

நீங்கள் தமிழகத்தின் நாட்டுப்புறங்களுக்குப் போகிறீர்கள்! உழுது பலனை விளைவிக்கும் உழவர்களைச் சந்திக்கிறீர்கள்! அவர்கள் தொல்லைகளைக் கேட்டு அறிகிறீர்கள்! அவர்கள் துயர் களைய வழிகளை ஆய்கிறீர்கள்! வேளாண்மைத் துறை அதிகாரிகளை அழைத்து ஆலோசனைகள் வழங்குகிறீர்கள்! நீங்கள் தமிழகத்து வேளாண்மைமீது கொண்டிருக்கும் பற்றுக்கும் ஆர்வத்துக்கும் எங்கள் நன்றி!

உழவுத் துறையிலே மட்டுந்தான் உங்களுக்கு ஈடுபாடு என்றில்லை; தொழில் துறையிலும் தாங்கள் மெத்த அக்கறை காட்டுகிறீர்கள்!

மதிப்புக்குரிய ஆளுநர் அவர்களே! தாங்கள் இந்தக் காட்சிக்கு வந்து பார்த்துப் பயன் பெற்றிருக்கிற அளவுக்கு நான் பார்க்கவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறேன். நாட்டைப்பற்றிப் பொதுவாகப் பேசிய தாங்கள், தமிழகம்பற்றியும் பேசியிருக்கிறீர்கள்.

தமிழகத்தில் என்னதான் இல்லை? இங்கே எல்லா வளங்களும் இருக்கின்றன; ஆனால் நித்தநித்தம் கண்டு பிடிக்கப்படும் விஞ்ஞானப் புதுமைகள், உழவிலும் தொழிலிலும் இன்னும் உரிய அளவில் புகுத்தப்படவில்லை—அதுதான் குறை!

சில நாடுகளில் பெட்ரோல் மட்டுமே கிடைக்கும்—பிற வளங்கள் இரா!

சில நாடுகளில் நிலக்கரி மட்டும் கிடைக்கும்—இரும்பு கிடைக்காது!

வளங்கள் இருந்தால் பொருள்களை அனுப்பத் துறைமுகம் இராது!

நல்ல பருவ நிலை மாற்றங்கள் இருப்பதில்லை!

ஆனால் இந்த நாட்டில் எல்லாமே உண்டு! இயற்கை தரவேண்டியது இன்னம் எதுவும் இல்லை!

இந்த நாட்டின் பல்வேறு வகையான கால நிலை—வெப்பதட்பங்கள்—பருவ மாற்றங்களைக் கண்டு வியந்து நிலநூல் வல்லார், இந்த நாட்டை, 'ஒரு துணைக்கண்டம்' என்றே குறிப்பிடுகிறார்கள்.

தமிழகத்தில் இப்படிக் கிடக்கும் வளமிக்க சிறப்புக்களை ஊருக்கும் உலகுக்கும் அறிவிக்கும் முயற்சியே இந்தக் காட்சியில் உள்ள தமிழக அரசின் அரங்கு!

நிதானமாக இருந்தாலும், நிலையாக—முறையாக இங்கே ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சியை விளக்கிடும் முயற்சியே இந்த அரங்கு!

'வளர்ச்சி இருக்கிறது' என்று சொன்னேனே அன்றி, 'அது, தேவையான அளவு இருக்கிறதா' என்றால், இல்லை! இருக்கிற வளங்களோடு ஒப்பிட்டால், இருக்கவேண்டிய அளவிலும் அது இல்லை!

அதற்குத் தடையான காரணங்களுள் ஒன்று, மக்கள் பெருக்கம்; மக்கள் தொகை நித்தமும் வளருகிறது — மெத்த விரைவாகவும் வளருகிறது—நம்மை அறியாமலே வளருகிறது; அதன் விளைவுதான், தனி மனிதனின் சுகவாழ்வின் தரம் குறைந்துகொண்டே வருவது!

'மக்கள் பெருக்கம்' என்றபோது, முதலில் எனக்குக் கேரளம்தான் நினைவுக்கு வருகிறது; தமிழகத்திலும் மக்கள் தொகை மிக அதிகமாகவே இருக்கிறது; அதன் விளைவாக, அந்த மக்களுக்கு வாழ்வு தேடித்தர, வெளியே செல்ல வழி கண்டாக வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல; பர்மா, இலங்கை, தாய்லாந்து போன்ற நாடுகள் விடுதலை பெற்றபின், அந்த நாடுகளில் குடியேறிக் காலகாலமாய்ப் பாடுபட்டு வாழ்ந்த தமிழரை வெளியேற்றும் நிலை ஏற்பட்டிருக்கிறது; அவர்களையும் நாம் ஏற்றுக் கொண்டாகவேண்டி இருக்கிறது!

நாடற்று வாழ்வற்று அகதிகளாக வரும் அவர்களை, உழவராய்—தோட்டத் தொழிலாளராய்—சிறு வணிகராய்—தொழில் வல்லாராய்க் குடியமர்த்தும் கடமையும் நமக்கு இருக்கிறது. அதற்கான திட்டங்களும் நம்மிடம் இருக்கின்றன!

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 மாசி 11 (23—2—68) வெள்ளி

# முதல்வரின் உறுதிமொழியும் வேண்டுகோளும்

மத்திய அரசின் இந்தித் திணிப்பு முயற்சிக்கு எதிராகத் தென்னக மாணவர்கள் தீவிரமான கிளர்ச்சியை மேற்கொண்டனர். தென்னகத்தைச் சேர்ந்த ஆந்திரம், கருநாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களிலும், மாணவர்களின் கிளர்ச்சி சிற்சில இடங்களில் விட்டுவிட்டும், மேலும் சில இடங்களில் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், 'மாணவர்களின் கிளர்ச்சி நிறுத்தப்பட்டுவிட்டது' என முடிவுகட்டத்தக்க நிலை தலைகாட்டியது; அனைத்துக் கல்விக்கூடங்களும் திறக்கப்பட்டன; மாணவர்களும், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் கைவிட்டுவிட்டு, கல்விக்கூடங்களுக்குத் திரும்பினர்.

ஆனால், இந்த விரும்பத்தக்க சூழ்நிலை, மாணவர்களைப் பற்றி அறிந்தோ அறியாமலோ தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் கூறிய சுடுசொல்லால், எதிர்பாராதவகையில் குலைந்துவிட்டது. காங்கிரசுத் தலைவர் சென்ற இடங்களிலெல்லாம், ஆங்காங்கே இருந்த மாணவர்கள், அவருக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்ட முற்பட்டனர்.

'எனக்குப் பேச்சுரிமை உண்டு; நான் நினைத்ததைக் கூற உரிமை இருக்கிறது' என, மாணவர்களைப் பற்றித் தாம் கூறிய சுடுசொல்லுக்கு முதற்கண், சுப்பிரமணியம் விளக்கம் கொடுத்தார்; இருந்தாலும், பின்னர் தமது போக்கை மாற்றிக்கொண்டு, மாணவர்களைப் பற்றித் தாம் கூறியவற்றிற்காக வருத்தமும் தெரிவித்துக் கொண்டார்.

இப்படி அவர் வருத்தம் தெரிவித்துக் கொண்டதை, மாணவர்களில் பெரும் தொகையினர் ஏற்றுக்கொண்டனர்; 'அவருக்கு எதிராக இனிக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுவதில்லை' என்ற முடிவிற்கும் வந்துவிட்டனர்.

இந்த நிலையில், இரண்டொரு ஊர்களில்–அதிலும் குறிப்பாகக் கோவை நகரத்தில், மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த சில அஞ்சல் நிலையங்கள் முன்னால் மாணவர்கள் மறியல் செய்ததாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது; மறியல் அளவுடனும் அம்மாணவர்கள் கிளர்ச்சியை முடித்துக்கொள்ளவில்லை; அரசியல் சட்ட மொழிப் பிரிவுக்கு மாணவர்களில் சிலர் தீயிட்டனராம்; அப்படித் தீயிட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

'இந்தத் தீயிடலைத் தொடர்ந்து மற்றொரு தீயிடல் நிகழ்ச்சியிலும் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்' எனச் செய்தி தரப்பட்டிருக்கிறது; அதாவது, இந்திய மக்கள் அனைவரின் வணக்கத்துக்கும் மரியாதைக்கும் உரித்தான தேசியக் கொடிக்கு மாணவர்கள் நால்வர் தீயிட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

'தேசியக் கொடியை அவமதிப்பது, சட்டத்துக்குப் புறம்பான செயல்' என்பது ஒரு பக்கம் இருக்க, 'விரும்பத்தகாத செயல்' என்பதை மாணவர்கள் உணர்ந்துகொள்ளாமல் இருந்திட நியாயமில்லை. தேசியக் கொடியை அவமதிக்கின்ற சிறு செயலை மாணவர்களில் சிலர் மேற்கொண்டிருப்பது, மாணவர்கள் அனைவருக்குமே களங்கம் தரக்கூடியதாகும் எனக் கூறத் தேவையில்லை.

தனது இந்தித் திணிப்பு தென்னக மாணவர்களிடம் எத்தகைய ஆத்திரத்தை மூட்டியிருக்கிறது—இந்தித் திணிப்பை அவர்கள் எந்த அளவுக்கு வெறுக்கின்றனர்—என்ற உண்மையைத் தானாக உணர்ந்துகொள்ள முடியவில்லை என்றாலும், தென்னக மாணவர்களின் பரவலான கிளர்ச்சிகளால் இந்திய அரசாங்கம் உணர்ந்துகொண்டுவிட்டது. இந்தித் திணிப்பு முயற்சியைக் கைவிட்டுவிடும்படி, தென்னக மாணவர்களின் தீவிரக் கிளர்ச்சியால் விழிப்படைந்துள்ள அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சித் தலைவர் முதற்கொண்டு தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் வரை, இந்திய அரசாங்கத்தை நெருக்கிவருகின்றனர்.

ஏற்கனவே இருந்துவந்த தமிழக அரசு எப்படி இருந்திட்ட போதிலும், இன்றையத் தமிழக அரசோ, தென்னகத்தில் இன்று 'சண்டமாருதம்' என மோதிக்கொண்டிருக்கின்ற இந்தி எதிர்ப்பின் கூர்முனை—என்பதை, மாணவர்கள் அறியாததல்ல. இந்தி மொழிக்கு எதிராக முதன்முதலாக அறப்போர்க்களம் கண்ட பெருமை இன்று தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அறிஞர் அண்ணா அவர்களையும், மற்ற கழகத் தோழர்களையும் சார்ந்திருப்பதாகும் என்ற உண்மையும் மாணவர்களுக்குத் தெரியும்.

இந்தி மொழி திணிக்கப்படுவதில் மாணவர்கள் கொண்டிருக்கின்ற எதிர்ப்பு உணர்ச்சியும், அதே துறையில் தாங்கள் கொண்டிருக்கின்ற எதிர்ப்பு உணர்ச்சியும் ஒன்றே என்ற உண்மையை, சட்டப் பேரவையில் புரட்சிகரமான மொழித் தீர்மானத்தை நிறைவேற்றி இன்றையத் தமிழக கழக அரசு உறுதி செய்திருக்கிறது. இந்தச் சிறந்த ஒன்றைவிட, இந்தித் திணிப்பு முயற்சிக்கு எதிராகத் தாம் கொண்டிருக்கின்ற முடிவான கருத்தை வெளியிடக்கூடிய வேறு சிறந்த ஏற்பாடு, இந்தக் கட்டத்தில், தமிழக அரசுக்கு இருந்திட முடியாது.

இந்தித் திணிப்புக்கு எதிராக மாணவர்கள் எந்த முடிவைக் கொண்டிருக்கின்றார்களோ, அதை நூற்றுக்கு நூறும் ஒத்திருப்பது தான் இன்றையத் தமிழக அரசு கொண்டிருக்கின்ற முடிவும்—நிறைவேற்றி இருக்கின்ற தீர்மானத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கின்ற முடிவுமாகும்.

இதற்குப் பின்னரும், கிளர்ச்சியில் மாணவர்கள் ஈடுபடத்தான் வேண்டுமா? இனியும் கிளர்ச்சி தேவைதானா? முறைதானா?

சட்டப் பேரவையில் ஆளுநர் உரைமீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையில், மாணவர்களுக்குக் கனிவான வேண்டுகோள் ஒன்றை மீண்டும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் விடுத்துள்ளார்; அவ்வேண்டுகோளை, மாணவர்கள் பலமுறை படித்துச் சிந்திக்க வேண்டும்; அது, இது:—

"மாணவர்கள் சமுதாயம் இந்தித் திணிப்பால் எந்தவகையிலும் பாதிக்கப்படாமல் எல்லாக் கட்சியினரும் சேர்ந்து பாடுபடுவார்கள்—முடிவு காண்பார்கள் என அவர்களுக்கு உறுதியளிக்கிறேன். இம்மாதிரி, மறியல்கள்—வன்முறைச் செயல்களில் ஈடுபட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

கல்வி ஆண்டு, இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. தேர்வு செய்யப்படுவதற்குரிய இறுதிப் பரீட்சைக்கு இன்னும் சில நாட்களே உள்ளன. கல்வி கற்பதில் இத்தனைத் திங்களாக மேற்கொண்ட முயற்சி வீணாகட்டும் எனக் கருதக்கூடிய மாணவர்கள் இருக்கமுடியாது. எனவே, கல்விக்கூடங்களுக்குத் திரும்பி — தொடர்ந்து பயின்று — பரீட்சையில் பங்குகொண்டு — தேர்ச்சிபெற வேண்டும் என மாணவ மணிகளைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—கா. க.



# கசப்புணர்ச்சியை உண்டாக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானம்

## ச. சோ.--பி. சோ. கட்சியினரின் ஆத்திரமூட்டும் செயலுக்கு அவைத் தலைவர் கண்டனம்

### கழக உறுப்பினர்களின் கடும் கண்டனக் குரல்கள்

புதுடில்லி, பிப். 23—

தமிழக மாணவர்களில் ஒருசாரார், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தொடர்ந்து பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்துவது பற்றிய முழு விவரம் அடங்கிய அறிக்கை ஒன்றைத் தமிழக அரசிடமிருந்து மத்திய அரசு எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாகவும், அந்த அறிக்கை கிடைத்ததும் பரிசீலனை செய்யப்பட்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி மத்திப அரசு ஆராயுமென்றும், நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கவனஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதிலளிக்கையில் மத்திய உள்துறைத் துணை அமைச்சர் தெரிவித்தார்.

'இராஜாஜியும் காமராசரும் பேசியதாக வந்துள்ள பிரிவினைப் பேச்சு சரியானதுதானா' என்று சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சியின் தலைவர் நாடாளுமன்றத்தில் கேட்டதைத் தொடர்ந்து பல குறுக்கீடுகளும், ஆம்திரமேலீட்ட பேச்சுக்களும் எழுந்தன.

'இந்த மொழிப் பிரச்சினையை எப்படி அரசு தீர்க்கப் போகிறது?' என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சரமாரியான கேள்விகள் கேட்டபோது, 'எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஒன்றுகூடி இப்பிரச்சினையை எப்படி அணுகுவது என்பதைத் தெரிவிப்பார்களா?' என்று தலைமையமைச்சா இந்திரா காந்தி குறுக்கிட்டுக் கேட்டார்; இதைத் தொடர்ந்து கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன; 'தலைமையமைச்சரின் இந்தப் பேச்சு, தீங்கான விளைவுகளைக் கொடுக்கும்' என்று பி.சோ. கட்சித் தலைவர் நாத்பாய் குறிப்பிட்டார்.

"மேலும் துணைக் கேள்விகள் கேட்பது கசப்புணர்ச்சியைத் தான் வளர்க்கும்" என்று—ஆத்திர உணர்வுடன் இந்த வாக்கு வாதங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் நாடாளுமன்ற அவைத் தலைவர் இடைமறித்துக் குறிப்பிட்டார்; 'இப்பிரச்சினை ஒருமித்த கருத்தோடு தீர்க்கப்பட்டாலும் தீர்க்கப்படாவிட்டாலும், அவையில் விவாதிக்காமல் வெளியில் இதைப்பற்றி விவாதிக்கலாம்' என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கிளப்பப்பட்ட நேரத்திலேயே, 'இந்திய அரசியல் சட்டம் 376-வது பிரிவின்படி இப்பிரச்சினையை இந்த அவையில் விவாதிக்கக்கூடாது' என்று, புரட்சி சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீகண்டன் நாயர் ஓர் ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்; 'இது, மாநில ஆட்சியின் சட்டமும் ஒழுங்குப் பற்றிய பிரச்சினையானதால், இதைப் பற்றிய விவாதம் இந்த அவையில் நடத்துவது மாநில அரசை இழிவுபடுத்துவதாகும்' என்று அவர் குறிப்பிட்டார்.

கழக உறுப்பினர் செ. கந்தப்பனும், இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்தார்.

"இப்பிரச்சினை விவாதிக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பதை, இந்த அவைக்கே விட்டுவிடுகிறேன்" என்று நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் சொன்னார்.

"இந்தி பேசாத மக்கள் மீது இந்தி ஏகாதிபத்தியவாதிகள் தங்கள் மொழியை வலுக்கட்டாயமாகத் திணிக்கப் பார்க்கிறார்கள்"

என்று, உள்துறைத் துணை அமைச்சர் அறிக்கை அளிப்பதற்குமுன் ஸ்ரீகண்டன் நாயர் குறிப்பிட்டார்.

"பல ஆண்டுகளுக்கு முன், முகமது அலி ஜின்னாவினால் தொடங்கப்பட்ட இயக்கம் எவ்வளவு பயங்கர விளைவுகளை உருவாக்கின"

என்று இந்தக் கவன ஈர்ப்புப் பிரச்சினையைக் கொண்டுவந்தவர் குறிப்பிடுகையில், எதிர்க் கட்சி உறுப்பினர்களும், காங்கிரசு உறுப்பினர்களுள் ஒரு பகுதியினரும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர்.

"மதுரையில் நடைபெறும் கிளர்ச்சியை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால், அதனாலும் விபரீத விளைவுகள் ஏற்படும்"

என்று நரேந்திர குமார் என்பவர் சொன்னார்.

"கடந்தகால வரலாறுகளையும், விரும்பத்தகாத விளைவுகள் பற்றியும் உறுப்பினர் பேசவேண்டாம்"

என்று அவைத் தலைவர் திரு. சஞ்சீவ ரெட்டி கேட்டுக்கொண்டார்.

"அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களை வட்டமேசை மாநாடுமூலம் ஒன்றுகூட்டி இப்பிரச்சினையை விவாதிக்க அரசு ஏதேனும் திட்டம் கொண்டுள்ளதா?" என்றும் நரேந்திர குமார் கேட்டார்; (ஆத்திரமுற்றிருந்த கழக உறுப்பினர்களை அமைதிப்படுத்த, 'தமிழ் மக்களும் இந்தியர்களே' என்ற வாக்கியத்தை அந்த உறுப்பினர் தமிழிலேயே சொன்னார்.)

"இந்தப் புதிய பிரிவினைக் கிளர்ச்சிக்குப் பின்னால் ஏதாவது அரசியல் சக்தி வேலை செய்கிறதா?"

என்று ஜனசங்க உறுப்பினர் கேட்டதைத் தொடர்ந்தும் சூடான சொற்கள் பரிமாறிக்கொள்ளப் பட்டன.

தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள் ஒரு மாநாட்டைக் கூட்டி, 'தேசியக் கீதத்தையும், தேசியக் கொடியையும் அவமதிக்கவேண்டும்' என்றும், 'இந்திய யூனியனிலிருந்து தமிழ்நாடு பிரியவேண்டும்' என்றும் தீர்மானம் போட்டிருப்பதாகச் செய்தி வெளியாகியிருப்பதாக ஜனசங்க உறுப்பினர் சந்த் கோயல் சொன்னார்; 'இது, பிரிவினைத் தடுப்புச் சட்டத்தை எதிர்ப்பது ஆகாதா?' என்றும் அவர் வினவினார்.

"இராஜாஜியும் காமராசரும் பிரிவினை பேசுகின்றனர்—என்று வந்துள்ள பத்திரிகைச் செய்தி சரிதானா?"

என்று மது லிமாயி கேட்டதற்கு, கழக உறுப்பினர்களாலும், சுதந்தராக் கட்சி உறுப்பினர்களாலும் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

"இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழு மாணவர்கள் நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்திற்குத் தமிழக அரசும் பக்கபலமாக இருக்கிறதா" என்றும், மது லிமாயி கேட்டார்.

"இராஜாஜி தமது கடைசி காலத்தில் பிரிவினையைத் தூண்டிவிடும் வகையில் பேசிவருவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா?—அதைப் போன்றே காமராசரும் பேசிவருவதாக வெளிவந்துள்ள செய்திகளும் இந்த அரசுக்குத் தெரியுமா?"

என்றும், சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் மது லிமாயி கேட்டார்.

"இராஜாஜி ஒருபோதும் அப்படிப் பேசவில்லை" என்று சுதந்தரக் கட்சித் தலைவர் பேராசிரியர் ரங்கா இடைமறித்துப் பேசினார்.

"ஒரு பிரிவினைக்குக் காரணமாக இருந்தவர் இராஜாஜி" என்று மது லிமாயி குறிப்பிட்டதைத் தொடர்ந்து கூச்சலும் குழப்பமும் அவையில் ஏற்பட்டன.

"மது லிமாயி குறிப்பிட்டதைப் போல் காமராசர் ஏதும் பேசவில்லை" என்று, உள்துறைத் துணை அமைச்சர் குறுக்கிட்டுச் சொன்னார்.

இராஜாஜியைப் பற்றி மது லிமாயி சொன்ன கூற்றை, இந்தப் பிரேரணைக்கு கையெழுத்திட்டிருந்த சுதந்தரக் கட்சி உறுப்பினர் பட்டோடியா மறுத்தார்.

"மத்திய அரசு கடைபிடிக்கும் கொள்கைதான் இப்படிப்பட்ட நிலைமைகளுக்கெல்லாம் காரணம்" என்று, சுதந்தரா உறுப்பினர் தொடர்ந்து வலியுறுத்திச் சொன்னார்; 'இப்பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசு சரியான முயற்சியை மேற்கொள்ளுமா?' என்றும் அவர் கேட்டார்.

"தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், மாணவர்களுக்கு எரிச்சலூட்டத்தக்க வகையில் பேசியதுதான் தமிழகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமைக்குக் காரணம்" என்று பேராசிரியர் க. அன்பழகன் எடுத்துரைத்தார்.

# மாநிலங்கள் உரிமையில் கைவைக்கும் மற்றொரு ஏற்பாடு!

## 'தொழிற்பாதுகாப்பு' என்ற பெயரால் டில்லி அமைக்கும் புதிய போலீசு!

### கழக உறுப்பினர் செ. கந்தப்பன் கடும் எதிர்ப்பு

'மத்தியத் தொழிற் பாதுகாப்புப் படை' என்னும் பெயரில் மத்திய அரசு உருவாக்கவிருக்கும் தனிப் போலீசுப் படை அமைப்பின் சட்டதிட்டங்கள் பற்றி ஆராய நியமிக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, தனது அறிக்கையைச் சிற்சில மாறுதல்களுடன் நாடாளுமன்ற மேலவையில் தாக்கல் செய்திருக்கிறது.

குழு செய்த திருத்தங்களில், ''மத்திய அரசால் நிர்வகிக்கப்படாத ஒரு தொழிற்சாலையைப் பாதுகாக்கும் பணியில், மேற்படி போலீசுப் படை ஈடுபடுவதற்கு முன், சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும்'' என்பது ஒன்றாகும்.

"மத்திய அரசினுடையது அல்லாத ஒரு தொழிற்சாலை, 'முக்கியமானது' என முடிவு கட்டுவதற்கு முன், மத்திய அரசின் ஒரு தொழில் நிறுவனம் இயங்க—மேற்படி தொழிற்சாலை அவசியமானதாக இருந்தால்—'அத்தொழிற்சாலை அமைந்திருக்கும் சம்பந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலைப் பெற்றாக வேண்டும்' என்பதும் ஒரு திருத்தமாகும்.

"மாஜிஸ்திரேட்டின் அனுமதி இல்லாமலோ, வாரண்டு இன்றியோ யாரையும் மேற்படி போலீசுப் படை கைது செய்வது, மிகவும் நெருக்கடியான நேரத்தில் மட்டுமே இருக்க வேண்டும்'' என்றும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

"பொதுத் துறைத் தொழில் நிறுவனங்களின் பாதுகாப்புக்காக நியமிக்கப்படும் மேலதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோரின் கடமைகள் பற்றி வரையறை செய்யப்படல் வேண்டும்'' எனவும் சிபாரிசில் காணப்படுகிறது.

இந்தச் சிபாரிசுகளில் தனது அதிருப்தியைத் தெரிவித்து எழுதப்பட்ட குறிப்பில் சுதந்தரக் கட்சியைச் சேர்ந்த கே. சுந்தரம் (மேலவை உறுப்பினர்) தெரிவித்திருப்பதாவது :—

"இந்த மசோதாவினால் பல விதமான சிக்கல்கள் ஏற்படக்கூடும் ; அதிலும் குறிப்பாக மத்திய அரசிலும், மாநில அரசிலும் ஒரே கட்சி ஆட்சி செய்யாமலிருந்தால், அந்த மாநிலத்தில், இது நிச்சயமாகச் சிக்கலைத் தோற்றுவிக்கும். இந்த அமைப்புக்குப் பரந்த அளவில் தரப்பட்டிருக்கும் அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடும்.''

குழு உறுப்பினர்களான எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஏனைய ஒன்பது பேர்களும், இதுபோன்றே தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.

பங்கா பிகாரி தாஸ், டி. தேங்காரி, சீனிவாச மிஸ்ரா ஆகியோர், 'இம்மசோதாவின் பிரிவுகள், மத்திய—மாநில அரசுகளிடையே தகராறுகளையும் மனக்கசப்பையும் உருவாக்கும்' என்று குறிப்பிட்டு இம்மசோதாவையே எதிர்த்திருக்கின்றனர்.

"இந்த மசோதா, அந்தந்த வட்டாரங்களில் உள்ள போலீசாரின் அதிகாரங்களை ஓரளவுக்கு, மத்தியப் போலீசு எடுத்துக்கொள்ள வழிவகுக்கிறது; ஒரு குடிமக்களை மாஜிஸ்திரேட்டின் உத்தரவோ வாரண்டோ இன்றிச் சோதனையிடவோ, கைதுசெய்யவோ வகைசெய்கிறது''

என்றெல்லாம் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

"இப்படி ஒரு படையை நிறுவுவது, நிர்வாகத்தினருக்கும்—தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியை விரிவடையச் செய்யும்; இதற்குப் பதிலாக அமுலில் உள்ள காவல்படையினரை (watch & ward) திறமையாக இயங்கச் செய்து அவர்களுக்கு நவீன பயிற்சிகளை அளிக்கலாம்''

என்றும் அவர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

"குழு, அசல் மசோதாவின் குறிக்கோளில் எந்த மாற்றமும் செய்யாமல், சிறு திருத்தங்களே செய்துள்ளது. முழுக்க முழுக்க இம்மசோதா, சனநாயகவிரோதமான—பிற்போக்குத்தனமான—இழிதன்மை கொண்ட ஒன்றாகும் ; தொழிற்சங்க இயக்கங்களுக்கு உலைவைக்கும் நோக்கத்துடன் அமைந்திருக்கும் இப்படிப்பட்ட ஒரு மசோதா கொண்டுவருவதில் நியாயமே இல்லை''

என்று, இந்தர்ஜித் குப்தா என்ற வலது கம்யூனிஸ்டு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கிறார்.

கழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்களும் மசோதாவுக்குக் கடுமையான எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார் ; அவர் குறிப்பிட்டிருப்பதாவது :—

"மாநிலங்களின் உரிமைகளையும், அதிகாரங்களையும் கைப்பற்ற இம்மசோதா வகை செய்கிறது. இப்படி, போலீசுக்கு ஒப்பான ஒரு படையை ஏற்படுத்துவது, மாநிலங்களின் முழு அதிகாரத்திற்கு உட்பட்ட சட்டம்—ஒழுங்கு பொறுப்பை அளித்துள்ள அரசியல் சட்டத்தைப் பகிரங்கமாக மீறுவதாகும்.''

சுயேச்சை உறுப்பினர் என். சி. சட்டர்ஜி, இடது கம்யூனிஸ்டு உறுப்பினர்களான ஆர். உமாநாத், ஏ. பி. சட்டர்ஜி ஆகியோர், 'இப்படி ஒரு படையை ஏற்படுத்துவதற்கு அரசியல் சட்டம் இடமளிக்கிறதா' என்ற சந்தேகத்தையே எழுப்பியுள்ளனர்.

"மாநிலங்களுக்கு உள்ள சொற்ப அதிகாரத்தைக்கூட இது பறிக்கிறது; மத்திய—மாநில உறவுகள் இதனால் பாதிக்கப்படும்'' என்றும் கருத்தறிவித்த அவர்கள், 'உழைக்கும் தொழிலாளரின் சனநாயகப் போராட்டங்களை நசுக்க, மத்திய அரசுக்கு ஒரு கருவியாக இது பயன்பட வகை செய்வதாக இருக்கிறது' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## ஆங்கிலேயர் பாணியில் ஒத்துழைப்புக் கோரும் காங்கிரசு !

### கிருபளானி மனக்கொதிப்பு

புதுடில்லி, பிப். 22—

"காங்கிரசுக் கட்சித் தலைவர் ஒருவரால் மட்டும் இந்தியாவில் உள்ள பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவிட முடியாது என்றும், நம் எல்லோருடைய ஒத்துழைப்பின் உதவியினால்தான் முடியும் என்றும் ஒரு முறை ஜவகர்லால் நேரு என்னிடம் கூறினார்.

ஆனால், காங்கிரசு கோரும் ஒத்துழைப்பு எப்படி இருக்கிறது என்றால், தனது நிபந்தனைகளையெல்லாம் மற்றக் கட்சிகள் ஏற்றுக்கொண்டு ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்று அது விரும்புகிறது; இது, ஆங்கிலேயர்கள் இந்தியர்களிடமிருந்து எதிர்பார்த்த ஒத்துழைப்பைப் போல் உள்ளது !

ஒத்துழைப்பு என்பது இதுவல்ல ! அடிமைத்தனத்தைத்தான் காங்கிரசு கோருகிறது ! இதற்கு எதிர்க் கட்சியினர் இணங்கி, அடிமைகளாகமாட்டார்கள் !

காங்கிரசுக் கட்சியில் உள்ள அறிவாளிகளுக்கும் திறமைசாலிகளுக்கும் ஈடானவர்கள் எதிர்க் கட்சிகளிலும் இருக்கிறார்கள் ! அதிகாரங்களில் பங்கெடுத்துக்கொள்ள அவர்களும் அழைக்கப்பட வேண்டும் !

திறமையை நீங்கள் எப்படிப் புறக்கணித்துவிட முடியும்? ஒருவர் மனச் சங்கடத்தினாலேயே சாகவேண்டும் என்று எப்படி நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? அவர்களும் இந்த நாட்டுக்குப் பணியாற்ற வாய்ப்பளிக்க வேண்டாமா ?''

நாத்பாய் :—"நாட்டுக்குப் பணியாற்றும் உரிமையைக் கைப்பற்றுவோம் ! அதைத் தேடிச் செல்ல மாட்டோம் !''

## தொழில் தகராறுகள்

### 'கழக ஆட்சியில் குறைவு' என அமைச்சர் விளக்கம்

சென்னை, பிப். 21—

"காங்கிரசு ஆட்சியில் இருந்ததைவிட தி. மு. கழக ஆட்சியில் குறைவான தொழில் தகராறுகளே தோன்றியுள்ளன.

"கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரையில், 5,881 தொழில் தகராறுகளே இருந்தன; ஆனால், இதே காலத்தில் இதற்கு முந்தைய ஆண்டில் 6,086 தகராறுகள் இருந்தன ''

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன், சட்டமன்ற மேலவையில் கூறினார்.

"ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற கொள்கையைத் தமிழகத்தில் நிறைவேற்றும் உத்தேசம் இருக்கிறதா ?''

என்று கேட்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் கூறியதாவது :—

"இது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையெல்லாம் தொழில் பற்றிய தேசியக் குழு விசாரணை நடத்தி வருகின்றது. தொழிற்சங்கத் தலைவர்களையும், அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களையும் இந்தக் குழு சந்தித்து வருகிறது ; இதன் முடிவு தெரிந்த பின்னர்தான் இதுபற்றி பரிசீலிக்கப்படும்.''

"'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்று சட்டம் இயற்றுவது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதா என்பது பற்றிப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும் ''

என்று மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

## 'கட்சி பாகுபாட்டுக்கு இடமில்லை'

### தமிழகச் சட்டமன்றத்தில் சட்ட அமைச்சர் விளக்கம்

'வழக்குத் தொடருவதன் மூலமாகவோ, சிறைச்சாலைக்கு அனுப்புவதன் மூலமாகவோ மட்டும் அமைதியைக் காத்துவிட முடியாது; சில நேரங்களில் வழக்குகளைத் திரும்பப் பெறுவதன் மூலமும் அமைதியைக் காப்பாற்ற முடியும்.

"சமுதாயத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதே தமிழக அரசின் ஆசை; இதில் கட்சிப் பாகுபாட்டுக்கு இடமில்லை; எந்தெந்தக் கட்சியினர்மீது வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன என்று என்னால் விவரம் தர முடியும்.''

என்று, சட்டமன்றத்தில் அமைச்சர் செ மாதவன், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெளிவுபடுத்தினார்.

## எது தேவை?

"இந்தியாவுக்கு எத்தகைய அரசியல் சட்டம் ஏற்றது என்பது பலரால் மிகத் தீவிரமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது—

1. மாநில அரசுகளற்ற—ஒரே மத்திய அரசால் நாடு முழுவதும் நிர்வகிக்கக்கூடிய முறையைச் செயல்படுத்தும் 'யூனிட்டரி' அரசியல் சட்டம் தேவை என்று சிலரால் பேசப்படுகிறது. இது ஒரு சாபக்கேடான சிந்தனை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே இத்தகு யோசனை அப்பட்டமாக நிராகரிக்கப்பட்டுவிட்டது. பொறுப்பற்றதும், மிடுக்குள்ளவர்களால் அமைக்கப்படுவதுமான அரசு தாராளமாக அமையக்கூடிய சூழ்நிலை நிலவிய அந்த நாட்களிலேயே இந்த 'யூனிட்டரி' அரசு முறை, அதிகாரத்தைப் பரவலாக்க யோசனை கூறுவதற்கு அமர்த்தப்பட்ட ஒரு குழுவால் முழுதும் நிராகரிக்கப்பட்டது !

2. அடுத்து, அமெரிக்காவில் உள்ளதைப்போல், குடியரசுத் தலைவர் ஆட்சி முறையைப் பற்றிச் சிலர் சிந்திக்கிறார்கள். ஆங்காங்கு ஏற்படும் அரசியல்—நிர்வாக நெளிவு சுளுவுகளைக் கணக்கில் கொள்ளாமலேயே நாட்டு மக்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக வாக்களித்துத் தேர்ந்தெடுக்கப்படும் குடியரசுத் தலைவரின் ஆட்சியால் ஏற்படக்கூடிய குளறுபடிகள் அவர்களுக்குப் புரியவில்லை !

3. அகில இந்தியத் துறைகளாக நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாடுகள் விவகாரம், செய்திப் போக்குவரத்து முதலியவைகளை மட்டுமே தன்னிடம் மத்திய அரசு வைத்துக்கொண்டு மற்றவற்றைப் பரவலாக்கி விட்டுக்கொடுத்து சுய அதிகாரங்கள் படைத்த மாநில அரசுகளின் கூட்டாட்சி பற்றித் திரு. ஸ்ரீபிரகாசா தெரிவித்த கருத்துக்கு ஏற்ப சிந்திப்பது நல்லது.''

என்று கோட்டயத்தில் நடைபெற்ற ஆங்கில மொழி மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசிய டாக்டர் ஏ. இராமசாமி (முதலியார்) அவர்கள் குறிப்பிட்டார்.

## தமிழகச் சட்டமன்ற மேலவை இடைத்தேர்தல்

### மார்ச் 12-ல் நடைபெறும்

புதுடில்லி, பிப். 22—

தமிழகச் சட்டமன்ற மேலவை உறுப்பினர் பதவியை திரு. ஆர். வெங்கட்ராமன் இராஜினாமாச் செய்ததால் ஏற்பட்ட காலி இடத்தை நிறைவு செய்வதற்கான இடைத் தேர்தல்பற்றித் தேர்தல் குழு முடிவு செய்திருக்கிறது.

இடைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான இறுதி நாள் பிப் 29.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான இறுதி நாள் மார்ச் 4.

போட்டி இருந்தால் மார்ச் 12-ந் தேதி தேர்தல் நடைபெறும்.

## பல மொழிகள் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு

### இரு மொழிக் கொள்கைகளால் பாதிக்கப்படவில்லை

கல்வி அமைச்சர் விளக்கம்

சென்னை, பிப். 22—

"தாய்மொழி, ஆங்கிலம் தவிர வேறு மொழிகளைக் கற்பதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

"இரண்டு மொழிகளுக்குமேல் கற்றுக்கொள்வதற்கு இப்போது தடை எதுவும் இல்லை; இரு மொழிக் கொள்கையினால் பல மொழிகள் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு மறுக்கப்படவில்லை ''

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்ற மேலவையில் தெரிவித்தார்.

## காங்கிரசு நாளிதழ்மீது வழக்கு

திண்டிவனம் வட்டம் ஊரல் ஊராட்சிமன்றத் தலைவர் வா. இலட்சுமணன், ஊராட்சி பணத்தைக் கையாண்டதாக ஒரு பொய்ச் செய்தியை 'நவசக்தி' ஏடு வெளியிட்டுள்ளது.

அச்செய்திக்கு எவ்வித ஆதாரமும் இல்லையென்றும், அது உண்மைக்குப் புறம்பானது என்றும், வேண்டுமென்றே தமக்கிருக்கும் மதிப்பைக் குலைக்க வேண்டும் அவமானப்படுத்த வேண்டும் என்றும் செய்தி வெளியிட்ட 'நவசக்தி' ஆசிரியர்மீதும், மற்றும் 8 நபர்கள்மீதும் இ.பி.கோ. 500, 501-வது பிரிவின்படி ஊரல் ஊராட்சிமன்றத் தலைவர், விழுப்புரம் முதல் வகுப்பு நீதிபதிமுன் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

கழகத் தோழருக்காக திண்டிவனம் வழக்கறிஞர்கள் டி. ஏ. எஸ். பாலன், கே. பாண்டுரங்கன், விழுப்புரம் மேகநாதன் முதலானோர் ஆஜரானார்கள்.

மறுவிசாரணை, 27—2—68-க்கு வைக்கப்பட்டிருக்கிறது.

# 'விளைவுகளைப் பரிசீலிக்கத் தவறிவிட்டனர்!'

## இந்தி மொழியைத் திணித்தால் ஒற்றுமையா உருவாகும்?

### மத்திய அரசுக்கு க. அன்பழகன் அறிவுரை

"இந்திக்கு எதிர்ப்பு வளர்ந்து வருகிறது; இந்திக்காரர்களின் வெறியே இதற்குக் காரணம்.

"இந்தியை மட்டும் ஏக ஆட்சிமொழியாக ஆக்குவதிலுள்ள விளைவுகளைப் பரிசீலிக்க அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் தவறிவிட்டனர்! அவர்கள், தென்னிந்திய மொழிகளுக்கு மத்திய ஆட்சியில் எந்தத் தகுதியையும் தரவில்லை!

"நாட்டில் 'ஒற்றுமை வேண்டும்' என்கிறார் குடியரசுத் தலைவர்; ஆனால், இந்தியைத் திணிப்பதன் மூலம் இதைச் சாதிக்கமுடியாது -- அடையமுடியாது -- பெற முடியாது!

"இந்தியைத் திணிப்பது, 'இந்தி பேசும் மக்களினின்றும் நாம் வேறுபட்டோர்' என்ற உணர்வையே தென்னக மக்களுக்குத் தந்துள்ளது! ஆட்சிமொழிச் சட்டம் நாட்டைத் துண்டாடிவிட்டது!

"அண்மையில் இரஷ்யத் தலைமையமைச்சர் வந்தபோதும் -- யூகோ குடியரசுத் தலைவர் வந்தபோதும், அனைத்திந்திய வானொலி வர்ணனை முழுவதும் இந்தியிலேயே இருந்தது!

"இந்திய அரசியலில், இந்தி பேசும் மாநிலமான உத்தரப் பிரதேசத்தின் இழுப்பு உள்ளது! அடுத்தடுத்து அந்த மாநிலக்காரரே தலைமையமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்படுவதிலிருந்து இது கண்கூடாகும்! இந்தி ஆட்சிமொழியாக்கப்பட்டதே இதற்குக் காரணம்!"

இவ்வாறு மக்களவையில், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகையில், தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் விளக்கிக் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :-

"ஆட்சிமொழிச் சட்டம் தற்போதுள்ளபடி அமுல்படுத்தப்பட்டால், நாட்டின் ஒற்றுமை என்பது நடைமுறையில் வரமுடியாததாகிவிடும்!

மொழிச் சிக்கல், ஒவ்வொரு வட்டார மொழியையும் உட்பகுதியாகக் கொண்டு விரிந்த அளவில் பரிசீலிக்கப்பட வேண்டும்.

இந்தி பேசாத பகுதி மக்கள் பாதகமான நிலையில் அல்லது சுமை கூடிய நிலையில் விடப்படாதவாறு வழிவகைகள் காணப்பட வேண்டும்.

முதல் நடவடிக்கையாக, நாடாளுமன்றத்தின் கடந்த கூட்டத் தொடரில் நிறைவேறிய மொழித் தீர்மானம் திரும்பப் பெறப்பட வேண்டும்.

இதை அடுத்து, மொழிச் சிக்கலைத் தீர்க்க அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட உயர்மட்டக் கூட்டம் நடத்தப்படவேண்டும்.

தெற்கு, ஒருபோதும் இந்தியை மட்டும் ஏக ஆட்சிமொழியாக ஏற்காது!

1950-ல் செய்யப்பட்ட தவறு (அரசியல் சட்டத்தில் இந்தியை ஆட்சிமொழியாக்கியது) சரி செய்யப்படவேண்டும்.

மொழிச் சிக்கலைத் தீர்ப்பதற்காக, 'எல்லா மொழிகளையும் சம அந்தஸ்து கொண்டனவாக உயர்த்த வேண்டும்; அதற்கேற்ற வண்ணம் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்' என்ற என் கட்சியின் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

'தேசியரீதியில், அனைத்துக் கட்சிகள் மாநாடு நடத்தப்பட வேண்டும்' எனும் தமிழகச் சட்டமன்ற தீர்மானம், இந்த இலக்கை எட்டுவதற்காகவே தீட்டப்பட்டது.

மொழித் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டால்தான், தங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட்டதாகத் தென்னிந்திய மாணவர்கள் கருதுவர்.

சட்டம் மற்றும் அமைதியைக் காக்கத் தமிழக அரசு போதிய நடவடிக்கை எடுத்துள்ளது! சட்டக் குலைவில் ஈடுபடுவோர் தண்டிக்கப்பட்டே தீருவர்!"

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

## உலக நாடுகளுடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றிற்கெல்லாம் உறுதுணை செய்யும் வகையில்தான் நம்முடைய நல்லெண்ணமும், ஆர்வக் கனவுகளும், வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவுடன் ஒட்டிவளர்ந்திட வழி காணும் நிலையிலேதான் இந்தச் சந்தைக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

எல்லாம் சரியாக இருந்தால்—திட்டங்களின்படி நாங்கள் நடக்க முடிந்தால்—இன்னம் பத்தே ஆண்டுகளில் அல்லது இன்னம் விரைவில், உழவு—தொழில் என்ற இருமுனைகளிலும் நாங்கள், வளர்ந்துவிட்ட உலக நாடுகளுடன் போட்டியிடும் நிலைக்கு வளருவோம் என்று உறுதி கூறுகிறேன்.

மக்களுக்கு வயிறார நல்ல உணவு—சிறப்பான உடை—இருக்க வசதியான வீடு—உயர்ந்த பழக்க வழக்கங்கள் இவைதான் எங்கள் இலட்சியம்! அதுதான் உலகத்து மார்க்கங்கள் எல்லாம் எடுத்து இயம்பும் அறநெறி!

அந்த இலட்சியத்துக்கு எங்களை அர்ப்பணித்துக்கொள்ளத் துணை செய்யும் உலக நாடுகளுக்கெல்லாம் எங்கள் நன்றி."

கூட்ட முடிவில் தமிழக அரசுத் தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ. இராமகிருஷ்ணன் நன்றி சொன்னார்.

"தமிழக அரசு அரங்கு பார்வைக்கு இவ்வளவு கம்பீரமாகக் காட்சி அளித்தாலும், முதலமைச்சர் பலமுறை சொல்லிச் சொல்லி அறிவுறுத்தியதன் பயனாய் மிக மிகக் குறைந்த செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது" என்று, திரு. இராமகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

## நடக்க இருப்பவை

### 24--2--68

**நெல்லிக்குப்பம்**

2-வது வட்ட தி.மு.க. துவக்க விழா—அண்ணா மன்ற 7-வது ஆண்டு விழா; மாலை 6-30 மணிக்கு சோழவல்லி தமிழ்க் குச்சிப்பாளையம் தியாகி சின்னசாமி திடலில்; தலைவர்: கோ. கெங்காதரன்; பேசுவோர்: சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., ஏ. வி. தண்டபாணி, சி. பாலவேலாயுதம், துரை. அன்பரசன், மு. கலியபெருமாள், சு. பாண்டுரங்கன், ப. கேசவன்.

### 25--2--68

**முள்ளிப்பாடி**

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு ஆரோக்கியசாமி நகரில்; பேசுவோர்: எம். இராசாங்கம் எம்.எல்.ஏ., வி.எஸ். இலட்சுமணன், மு. காதர்சா பி.ஏ., க. சுந்தரம், மற்றும் பலர்.

**வெள்ளூர்**

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு கிராமப் பொதுத் திடலில்; தலைவர்: பெ. தவசு; பேசுவோர்: மா. இராசாங்கம் எம். எல் ஏ., ச. அமுதன் பி.ஏ., க. சுப்பையா, தாடி அப்தாலிப், மற்றும் பலர்.

**செம்பட்டு**

அறிஞர் அண்ணா மன்ற இரண்டாவது ஆண்டுவிழா; மாலை 6 மணிக்கு; தலைவர்: பெ. வெங்கடாசலம்; பேசுவோர்: சி.பி. சிற்றரசு எம்.எல்.சி., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., வி.எம். கணேசன், கூ.மு. பெரியசாமி, கோ. இராமானுசம், சி. கண்ணையன், எஸ்.எம். பீர்முகம்மது, கு. இராமசாமி, சி. செல்வராசன், இரெ. முருகையன், சி. கணேசன்.

**திருவாரூர்**

கலைஞர் படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்கு கீழவீதியில்; தலைவர்: டாக்டர் இரா. விசயராகவன்; பேசுவோர்: மதுரை கூடலரசன், தம்பி தேவேந்திரன் அ. இராசகோபால், மு. அப்துல்லா.

**விருதுநகர்**

கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 7 மணிக்கு தேவர் திடலில்; தலைவர்: த. தனபாலன்; பேசுவோர்; இராசாங்கம் எம்.எல்.ஏ., பி.எஸ். மணியம், நா.க. இராசமாணிக்கம், சி.பி. சாமி, பி. சண்முகக்கனி, ச. தனுஷ்கோடி.

**சக்கராப்பள்ளி**

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு அய்யம்பேட்டை மேல வாணியத் தெருவில்; தலைவர்: பி. நூர் முகம்மது; பேசுவோர்: அமைச்சர் எஸ்.ஜே. சாதிக் பாட்சா, இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., மன்னை ப. நாராயணசாமி, ந. சாமிநாதன், ஏ. அப்துல் வகாபு, டி.எம். இபுராகிம். (சக்கராப்பள்ளி ஊராட்சிமன்றம், அய்யம்பேட்டை முஸ்லிம் நிர்வாக சபை ஆகியவை சார்பில் அமைச்சருக்கு வரவேற்பு அளிக்கப்படும்; சக்கராப்பள்ளி உயர் தொடக்கப் பள்ளியில் அண்ணா அவர்களின் உருவப் படம் திறந்துவைக்கப்படும்.)

**நெய்வேலி**

தொழிலாளர் முன்னேற்றச் சங்கச் சார்பில் மாலை 6 மணிக்கு திரு.வி.க. திடலில்; தலைவர்: ரெங்கன்; பேசுவோர்: எஸ். இராகவானந்தம் எம்.சி., எஸ். இராமச்சந்திரன் பி.இ., எம்.எல்.ஏ., எம். செல்வராசு, வெ. இராமநாதன் பி.ஏ., பி.எல்., ஏ. அபிரகாம், எஸ். அமீது; துரை. வீராசாமி.

## குழுக் கூட்டங்கள்

**ஆலங்குளம் தொகுதி**

"ஆலங்குளம் தொகுதி தி மு க. உறுப்பினர் கூட்டம் 25—2—68 9-30 மணிக்கு ஆலடிப்பட்டி தொகுதிப் பணிமனையில் நடைபெறும்; கூட்டத்திற்குக் கழக ஆதரவாளர்களும் வருகை நல்கிட வேண்டுகிறேன்" என்று வட்டச் செயலாளர் அ. இராமநாதன் அறிவிக்கிறார்.

**திருப்பத்தூர் வட்டம்**

"இராமனாதபுர மாவட்டம் திருப்பத்தூர் வட்ட தி மு க. உறுப்பினர் கூட்டம் 25-2-68 மாலை 3-மணிக்கு திருப்பத்தூர் பயணிகள் விடுதியில் நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் பெரி. அழகு அறிவிக்கிறார்.

**நெய்வேலி**

"நெய்வேலி தொழிலாளர் முன்னேற்றச் சங்க செயற்குழுக் கூட்டம், 25—2—68 மாலை 3-மணிக்கு 26-வது வட்டத்தில் நடைபெறும்" என்று செயலாளர் ஆண்டகுருநாதன் அறிவிக்கிறார்.

**அம்பத்தூர் நகரியம்**

25—2—68 காலை 10-மணிக்கு அம்பத்தூர் நகரியம் தொழிற்பேட்டைப் பகுதி தி.மு.க. முக்கியஸ்தர்கள் குழுக் கூட்டம், கிருஷ்ணா திரைப்பட அரங்கில், சைதை வட்ட தி.மு.க. செயலாளர் சி. இராமலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

**நெல்லிக்குப்பம்**

"25—2—68 காலை 9-மணியளவில், நெல்லிக்குப்பம் நகர தி.மு.க. உறுப்பினர்கள் கூட்டம், கிரிஜா பேலசில் அவைத் தலைவர் சி. பாலவேலாயுதம் தலைமையிலும்—மாவட்டச் செயலாளர் இரா. சாம்பசிவம் முன்னிலையிலும்—அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. ஆணைப்படி நடைபெறும்; பொது உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் தங்கள் உறுப்பினர் (தலைமை நிலைய) பதிவு அட்டைகளை உடன் கொண்டுவர வேண்டுகிறோம்" என்று, வட்டச் செயலாளர் ஏ. வி. தண்டபாணி அறிவிக்கிறார்.

**கரூர்**

25—2—68 காலை 10-மணிக்கு கரூர் இராசலிங்க மன்றத்தில், கரூர் வட்ட—நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

## மதுரையில் முத்தமிழ் விழா

### அமைச்சர்கள் பங்கேற்பு

25—2—68-ல், மதுரை தமுக்கம் கலையரங்கில் முத்தமிழ் விழா நடைபெறும்.

**பட்டி மன்றம்**

காலை 10 மணிக்கு; தலைவர்: அமைச்சர் மா. முத்துசாமி: தலைப்பு: 'பாரதிதாசன் பாடல்களில் சிறப்பிடம் பெறுவது காதலா? வீரமா?'

'காதலே' எனும் தலைப்பில் பங்கு பெறுவோர்:—டாக்டர் மெ. சுந்தரம், ந. செகதீசன், தி. கு. நடராசன், திருமதி இந்திரா பெருமாள்.

'வீரமே' எனும் தலைப்பில் பங்கு பெறுவோர்:— சு. செல்லப்பன், ஔவை துரை நடராசன், சத்தியசீலன், திருமதி சக்தி பெருமாள்.

**அண்ணா கவியரங்கம்**

மாலை 3 மணிக்கு; தலைவர்: அமைச்சர் மு. கருணாநிதி; பங்கு பெறுவோர்:—கவிஞர்கள் கருணானந்தம், பொன்னிவளவன், தி. கு. நடராசன், தமிழ்ப்பித்தன், முடியரசன், வேழவேந்தன், முத்துலிங்கம், கொத்தமங்கலம் சுப்பு, அப்துர் ரகிமான் ஆகியோர்.

**நாடகம்**

இரவு 9 மணிக்கு; தலைவர்: சட்டப் பேரவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார்; எஸ். ஏ. அசோகன் குழுவினர் நடிக்கும் 'முக்கனி' நாடகம்—சேரன் செங்குட்டுவன்; சாக்ரடீஸ்; அனார்க்கலி (மு. கருணாநிதி தீட்டியவை).

மூன்று நிகழ்ச்சிகளுக்கும் சேர்த்து நன்கொடை ரூ. 10, 5, 2.

## கல்லூரி நிறுவ எம். ஜி. ஆர். நன்கொடை

சென்னை, பிப். 23—

காலஞ்சென்ற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பெயரில், மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் இவ்வாண்டில் கலைக் கல்லூரி ஒன்று நிறுவப்படவிருக்கிறது.

இந்த நினைவுக் கல்லூரிக்கு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள், ரூ. 10,000 நன்கொடை வழங்கியுள்ளார்.

## ஆந்திரத்தில் அமைச்சர் மதியழகன்

ஐதராபாத், பிப். 23—

ஆந்திர அரசிடம் பதினைந்தாயிரம் டன் நெல்லூர் அரிசியைப் பெறுவதற்காகத் தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் இங்கு வந்துள்ளார்.

இன்று அவர் ஆந்திர முதலமைச்சரையும், உணவு அமைச்சரையும் சந்தித்தார்.

ஆந்திரம் தரும் நெல்லூர் அரிசிக்குப் பதில் தமிழகம் கேரளத்திற்குத் தஞ்சைக் குறுவை அரிசியைத் தரும்.

## தமிழக மின்சார போர்டு ஒர்க்-சார்ஜ்டு பணியாளர் சங்க பேரவைக் கூட்டம்

தமிழக மின்சார போர்டு ஒர்க்-சார்ஜ்டு பணியாளர்கள் சங்கத்தின் முதலாவது ஆண்டுப் பேரவைக் கூட்டம், சங்கத் தலைவர் திரு. இ. இராமசாமி எம்.எல்.ஏ. தலைமையில் 25—2—68 பிற்பகல் 2 மணியளவில் அப்பர் ஆழியார் முகாமிலுள்ள பள்ளிக்கூட மண்டபத்தில் நடைபெறும்.

வரவேற்புரை: எம். சுப்பையா; ஆண்டு அறிக்கை: கே. சக்திவேல்; சிறப்புச் சொற்பொழிவாளர்கள்: என். வி. நடராசன் எம்.எல்.சி., உடுமலை ப. நாராயணன் எம்.பி., சி. டி. தண்டபாணி எம்.பி., மு. கண்ணப்பன் எம்.எல்.ஏ., ஈரோடு சின்னச்சாமி எம்.எல்.ஏ., சண்முகசுந்தரம் எம்.எல்.ஏ., இரா. கோவிந்தசாமி.

## ஆம்பூர் தொகுதியில் எம். பன்னீர்செல்வம்

### சுற்றுப்பயணம்

25-2-68-ல், சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், ஆம்பூர் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்வதால், குறிப்பிட்ட நேரத்தில்—குறிப்பிட்ட ஊர்களில் அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் அவரைச் சந்தித்து தங்கள் கோரிக்கை மனுக்களைத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சுற்றுப்பயணத்தில் திரு. எம். வி. சாமி, கு. ஆனந்தம் ஆகியோர் கலந்துகொள்வர்.

காலை 9-30 மணி: வெங்கிளி; 10 மணி: கீழ்முருங்கை; 10-30 மணி: சர்க்கரை ஆலை; 11 மணி: வடபுதுப்பட்டு; 11-30 மணி: பச்சகுப்பம்: பகல் 12 மணி: சொமேசுவரம்; பிற்பகல் 12-30 மணி: சோமலாபுரம்; 3 மணி: பெரியாங்குப்பம்; 3-30 மணி: நாச்சாரகுப்பம்; மாலை 4 மணி: மாராப்பட்டு; 4-30 மணி: செகிலிதுப்பம்; 5 மணி: மின்னூர்; 5-30 மணி: விண்ணமங்கலம்; 6 மணி: கன்னடிகுப்பம்; 6-30 மணி: ஆலாங்குப்பம்; இரவு 7 மணி: சோலூர்.

## வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

பிப். 24: நத்தம்; 25: செங்கோட்டை; 26: இலத்தூர்; 28: பெருங்கடம்பனூர்; 29: ஒரத்தநாடு.

மார்ச் 2: வேலூர்; 3: பெண்ணாடம்; 9: பாப்பிரெட்டிப்பட்டி; 10: வில்பட்டி.